بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# jamaat ul sahih al islam – tamil nadu



**ஜுமுஆ பேருரை**

**தலைப்பு :**

**அல்லாஹ்வின் பண்புகள்**

(பாகம் -11)

*ஹஸ்ரத் கலீ:பத்துல்லாஹ்*
*முனீர் அஹ்மது அஸீம் (அலை)*

*03 July 2020*
**(11 DHUL - QADDAH 1441 AH)**

*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No:- 917502272774***

## The Attributes of Allah (Part: 11)

### அல்லாஹ்வின் பண்புகள் (பாகம் - 11)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.்.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜும்மா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

அல்லாஹ்வின் கருணையாலும் தவ்.்.பீக்காலும் அவனது பண்புகளைக் குறித்துத் தொடர்ந்து விளக்க அவன் எனக்கு மீண்டும் வாய்ப்பளித்துள்ளான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறியதாக அபு ஹுரைரா (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்.

**“அல்லாஹ்வுக்கு தொண்ணூற்றொன்பது பண்பு பெயர்கள் உள்ளன. அவற்றை நினைவு கூருபவர் சொர்க்கத்தில் நுழைவார். நிச்சயமாக (அல்லாஹ் ஒருவன், அது ஒற்றைப்படை எண்) அவன் ஒற்றைப்படை எண்களை விரும்புகின்றான்.” (முஸ்லீம்).**

சஹீஹ் அல் புகாரி என்ற ஹதீஸ் தொகுப்பில் அல்லாஹ்வின் அழகான பண்பு பெயர்களைப்பற்றி, அவை தொண்ணூற்றொன்பது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. நூறுக்கு ஒன்று குறைவு. அல்லாஹ்வின் அத்தகைய பண்பு பெயர்களில் நம்பிக்கை கொண்டு, அவற்றின் பொருள் உணர்ந்து செயல்படுபவர் சொர்க்கத்தில் நுழைவார். அல்லாஹ் வித்ர் (ஒன்று) மற்றும் அவன் வித்ரை (ஒற்றைப்படை எண்) நேசிக்கின்றான்.

அல்லாஹ் படைப்பவன், அவன் வல்லமைமிக்க படைபாளனாவன். இந்த பண்பானது இந்த அற்புதமான பிரபஞ்சத்தின் சிக்கலான மற்றும் வியக்கத்தக்க அழகான அமைப்பை சுட்டிக்காட்டுகிறது. இந்த அமைப்பானது இது அண்ட

சராசரத்திலும் ஒவ்வொரு அணு அல்லது நுண்ணிய கூறுகளிலும் நமக்கு காண முடியும்.

இதில் அறிவை பெற்றுக் கொள்ளவதில் மனிதனின் பங்கானது, முழுக்க முழுக்க இந்த பௌதீக பிரபஞ்சத்தின் பகுதிகளைக் குறித்து நுணுக்கமான அறிவை பெற்றுக்கொள்வதில் மட்டுமல்லாமல், இந்த ஆன்மீக பிரபஞ்சத்தின் ஏற்பாடுகளைக் குறித்து பொதுவாகவும் விரிவாகவும் அறிவை பெற்றுக்கொள்வதிலும் உள்ளது. ஆன்மீக பிரபஞ்சத்தின் ஏற்பாடு மற்றும் அமைப்பு என்பது, வெவ்வேறு மலக்குகளின் பங்கு மற்றும் அந்தஸ்து, அத்துடன் அல்லாஹ்வின் தூதர்கள் மற்றும் நபிமார்களின் வருகை, ஆன்மீக வரிசையில் அவர்களின் அந்தஸ்து போன்றவையாகும்.

சில நபர்கள் இயற்பியல் (பௌதீக) அறிவியலுக்கு கிடைக்கக்கூடிய, சரிபார்க்கபட்ட அளவீட்டு முறைகளை மட்டுமே பயன்படுத்தி அறிவியல் சான்றுகளை நாடுகின்றனர். அவற்றின் பெருகி வரும் அதிநவீன கருவிகள் பௌதீக பிரபஞ்சத்தில் உள்ளார்ந்த ஒழுங்கின் புதிய மற்றும் ஆழமான அடுக்கை மட்டுமே வெளிப்படுத்துகின்றன. ஒரு சாதாரண மனிதனை பொறுத்தவரை, அவர்கள் இறையியல் அல்லது விஞ்ஞானத்தை நம்பியிருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் இந்த பிரபஞ்சத்தை பார்க்கும் போது உள்ளுணர்வாகவே அதன் ஒழுங்கான அமைப்பு மற்றும் அதன் அழகினை அறிவார்கள், அதாவது அந்த சாதாரணமனிதனுக்கு அல்லாஹ்வின் மீதும், அவன் உருவாக்கிய இந்த பிரபஞ்சத்திலுள்ள அனைத்து வகைப்பட்டவை மற்றும் அவற்றின் ஒழுங்கான அமைப்பின் மீதும் உறுதியான நம்பிக்கை கொள்ள எந்த அறிவியல் ஆதாரமும் தேவையில்லை. விஞ்ஞானிகள் அவர்களின் மேம்பட்ட கருவிகள் மூலம் இந்த உண்மையை இறுதியாகக் கண்டறிந்தனர். ஆனால் சாதாரண மனிதர்கள் ஏற்கனவே தனது உறுதியான நம்பிக்கையின் மூலம் இந்த அழகான உண்மையை கண்டறிந்தனர்.

உண்மையில் அல்லாஹ் தனது படைப்பினங்களை மிகுந்த அன்புடன் மிக சக்திவாய்ந்த எஜமானனாக அவர்களை ஆளுகிறான். எந்தவொரு மனிதனின் அன்பையும் விட அவனது ஹுப்பு அல்லது வூத்து (அன்பு) மிகவும் சக்தி வாய்ந்தது, ஏனெனில் அவன் மிகுந்த அன்பை அளிப்பவனாவான். மேலும் அந்த

அன்பானது மிகவும் உயரிய நிலையிலுள்ளது. அந்த அன்பின் மூலம் தனது படைப்பினங்கள் மீது அவனது கருணை, இரக்கம், ஒளி மற்றும் மன்னிப்பு ஆகியவை இறங்குகின்றன.

படைப்பாளன் என்ற நிலையில், அல்லாஹ் தனது சிறந்த படைப்பினமான மனிதனை அன்பால் படைத்துள்ளான். அவன் அல் முஸவ்வீர் ஆவான். அதாவது சிறந்த முறையில் வடிவமைப்பவன். அவன் மனிதனை மிக சிறந்த வடிவத்தில் படைத்துள்ளான். ஆகவே அல்லாஹ் அல் முஸவ்வீர் என்ற நிலையில் அவனை கேள்விக்குள்ளாக்க முடியாத வகையில் மிக சிறந்த முறையில் தனது படைப்பினங்களை வடிவமைப்பவனாக இருக்கின்றான்.

அல்லாஹ்வின் அப்பண்பை பின்பற்றுவதன் மூலம் சுயகட்டுப்பாடு மற்றும் சுய ஒழுக்கத்தினை பெற முடியும். ஒவ்வொரு பொருள் மற்றும் எல்லாவற்றின் வடிவத்தைக் குறித்து ஆழமான அறிவை இறைவன் கொண்டுள்ளதனால்தான் பல்வகையான படைப்பினங்கள் நிலைநிற்கின்றன, அவை மனிதனின் உள்ளத்திற்கு உணர முடியும் ஒன்றாகும்.

மனிதனின் இதயம் அல்லாஹ்வின் இல்லம், அல்லது பள்ளி வாசல் (மஸ்ஜித்) அல்லது கோவில் என்று கூறலாம். மனிதனின் இதயம் என்பது ஒருவரிடம் அவர் வைத்திருக்கும் எல்லா அன்பின் உச்சம் (இருக்கை) என்று பொதுவாக அறியப்படுகிறது. ஆனால் நம்பிக்கையாளர்களை பொறுத்தவரை அவர்களுக்குத் தெரிந்த மிக பெரிய அன்பானது அல்லாஹ்விடமிருந்து வரும் அன்பாகும். இறைவனின் அந்த அன்புதான் மனித படைப்பின் அடிப்படையாகவும் இருந்தது. திருக்குர் ஆனில் 96- ம் அத்தியாயத்தில் அதாவது சூரா: அல் அலக்கில் அல்லாஹ் அதை குறிப்பிடுகிறான்.

**“எல்லாவற்றையும் படைத்த உமது இறைவன் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை திரவத்திலிருந்து படைத்தான்.” (96:2-3)**

அலக் என்ற வார்த்தையின் பொருள், இரத்தம் உறைவதைக் குறிக்கிறது. மேலும் ஒட்டிக் கொண்டிருக்கும் பொருள். ஒரு லீச் போன்ற பொருள். லீச் என்பது ஒரு உயிரினம், இது இரத்தத்தில் தன்னை வளர்த்துக் கொள்கிறது. மனிதனின் படைப்புடன் மிக நெருக்கமாக இணைந்திருக்கும் இந்த வார்த்தையின் மற்றொரு

அர்த்தம் அன்பு என்பதாகும். அல்லாஹ் தனது அன்பிலிருந்து மனிதனை படைத்துள்ளான். சகோதரர்கள் அல்லது நண்பர்கள் என்ற நிலையில் ஒருவருக்கொருவர் வைத்திருக்கும் அன்பும், நட்பும் ஒருவருக்கொருவர் அவர்களை லீச்சைப் போல ஒட்டிக் கொள்ள வைக்கிறது. ஒருவருக்கொருவர் அவர்கள் வைத்திருக்கும் நேசமும், அவர்கள் உண்மையான வழியில் காட்டும் நட்பும் காரணமாக தங்களின் இயல்பு மற்றும் நடத்தை ஆகியவற்றை ஒருவருக்கொருவர் புரிந்துக்கொள்ள உதவி புரிகிறது.




அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ் கேரளா தென்மண்டலத்தின் அமீர் முகர்ராம் ஜமாலுத்தின் சாஹிப் அவர்கள் இந்த அத்தியாயத்தைக் (அல் அலக்) குறித்து என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார், கேரள வட மண்டலத்தின் நமது அமீர் முகர்ராம் டாக்டர் தாஹிர் சாஹிப் அவர்கள் சமீபத்தில் அலக் என்ற வார்த்தையின் இந்த குறிப்பிட்ட அர்த்ததைப்பற்றி ஒரு அழகான விளக்கத்தை வெளியிட்டார்.

அலக் என்ற வார்த்தையை ஆய்வு செய்யும் போது, இரத்த கட்டியிலிருந்து அல்லது ஒரு லீச் போன்ற பொருளிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டான் என்பதை குறிக்க மட்டுமல்லாமல் இந்த வார்த்தை அன்பை குறிக்க பல சந்தர்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சூரா அலக் அதாவது 96-ஆம் அத்தியாத்தின் 2,3,4, வசனங்களுக்கு ஹஸ்ரத் முஸ்லீஹ் மௌஊத் (ரலி) அவர்கள் வழங்கிய விளக்கத்தையும் அவர் பகிர்ந்து கொண்டார். இந்த வசனமானது, இறைவனின் அன்பு மனிதனின் இயல்பில் பதியப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. மேலும் இந்த இயல்பான தூண்டுதல், அதனை முழுமையான நிலையில் வெளிப்படுத்தி காட்டிய ஒருவர் இருந்திருக்க வேண்டும் என்பது சகஜமானது. அந்நிலையில் பார்த்தால், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் தன்னை படைத்தவனை முழு மனதுடனும் ஆத்மார்த்தமாகவும் நேசித்தார்கள். மேலும் இந்த வசனமானது மனிதனின் உடல் வளர்ச்சி படிப்படியாக இருப்பது போலவே அவருடைய ஆத்மீக வளர்ச்சியும் படிப்படியாக தான் நடக்கிறது என்பதை காட்டுகிறது. அந்த படிப்படியான வளர்ச்சி அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களில் உச்சக்கட்டத்தை அடைந்தது.

**(The Holy Quran with English translation and commentary, PP. 3409,10)**

மாஷா அல்லாஹ்! அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் அக்பர்! உண்மையில் புனித குர் ஆனின் வசனங்களும் சொற்களும் அறிவின் நீரூற்றுக்கள் ஆகும். அல்லாஹ்வின் வார்த்தைகளுக்கு ஒரு விளக்கம் (வர்ணனை) மட்டுமல்ல, அல்லாஹ்வின் வார்த்தைகள் வெவ்வேறு அர்த்தம் மற்றும் விளக்கங்களைக் கொண்டுள்ளன. மேலும் அது வாழ்க்கையின் வெவ்வேறு சூழ்நிலைக்களில் பயன்படுத்தப்படலாம், குறிப்பாக அல்லாஹ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வருகையின் போது பரிசுத்த ஆவியிலிருந்து அறிவு வழங்கப்படுகிறது. தங்கள் காலகட்டத்தில் இறை வெளிப்பாட்டின் (இறைத்தூதரின்) உண்மைக்கு சாட்சிகளாக மாறும் நேர்மையான நம்பிக்கையாளாகள் இந்த அருட்களை பெறுகிறார்கள். தங்கள் காலத்தின் போது பெறும் இறைச் செய்திகளின் உண்மைதன்மையை அவை உறுதிப்படுத்துகின்றன.

எனவே இது அல் வஹ்ஹாப் (வழங்குபவன்) என்னும் அல்லாஹ்வின் பண்பின் பக்கம் நம்மை அழைத்துச் செல்கிறது. இழப்பீட்டைப் பற்றி சிந்திக்காமல்

இலவசமாக வழங்குபவன் தான் அல்லாஹ். பரிசு என்று பொருள்படும் ஹிபா என்ற வார்தையிருது இந்த பெயர் உருவானது.

அப்பண்புபெயரின் சுருக்கமானது பயமோ அல்லது உதவியோ இல்லாமல் இவ்வுலகிலும் மறுவுலகிலும் வெகுமதியோ நன்றியோ எதிர்பார்க்கமால் வழங்குவதைக் குறிக்கிறது.

பொருத்தமான பிரார்த்தனை என்பது வறுமை மற்றும் உலக விருப்பத்தை நீக்குவதற்கு உதவுகிறது. மேலும் இந்த பிரார்த்தனையானது யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காத ஒருவராக உங்களை மாற்றிவிடும். அதன் விளைவாக அன்போடு வரத்தை வழங்கும். அல்லாஹ்விடமிருந்து மட்டும் கேட்கின்ற ஒருவராக நீங்கள் பரிணமித்துவிடவீர்கள். அன்பின் பரிசு அவனுடையதாகும். எந்த பிரதிபலனும் எதிர்பாரலும் இல்லாமல் வழங்கும் பரிசுதான் உண்மையான பரிசாகும். இந்த தகுதியுடன் பரிசுகள் வாரிவழங்கும் ஒருவர் மட்டுமே எல்லாம் கொடுக்கும் ஒரு சிறந்தவர் என்று அழைக்கப்படுவார். ஆகவே அல்லாஹ்வால் மட்டுமே இவ்வாறு கொடுக்க முடியும். மனிதன் கொடுக்கும் போது, அது சில வழிகளில் இருந்து சில நன்மைகளைப் பெறுவதற்கான நோக்கத்துடன் இருக்கும். அதாவது அவரது நோக்கம் ஒரு பாராட்டை பெறுவதாகலாம், அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஒரு பழியிலிருந்து மீட்ச்சியை பெறுவதற்காகலாம், அல்லது அவரது நற்செயலுக்கு ஒரு அங்கீகாரம் கிடைப்பதற்காகலாம் மேலும் சொர்க்கத்தை பெறவோ அல்லது நரகத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கவோ அல்லது வேறு ஏதேனும் எதிர்கால ஆதாயத்தை எதிர்பார்த்தோ மனிதன் தனது நோக்கத்திற்கு ஏற்று கொடுக்கின்றான். ஆனால் அல்லாஹ்வின் பொருட்டு வழங்குபவரை மட்டுமே பெருந்தன்மையுள்ளவர் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியானவர். அவர் இறைவனின் அன்பை பெறுவதற்காகவே வழங்குகின்றார். ஆயினும் கூட, இந்த ஆதாயம் என்பது பெரும்பலான மக்கள் ஆதாயம் என்று புரிந்து கொள்ளவில்லை. எனவே அத்தகைய நபர் ஆதாயத்தைத் தேடுவதிலிந்து விடுபடுபவராக இருப்பார். வேறு வார்த்தைகளில் கூறுவேமேயானால், இந்த செயலில் சுய நலத்தின் அடையாளம் எதுவும் இல்லை. ஏனெனில் அவர் அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நாடுகிறார்.

ஆனால் அல்லாஹ் மனிதனைப் போலல்லாமல், பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காமலும் கொடுகின்றான். அவன் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கும் அல் வஹாப் ஆவான். அவனது ரஹ்மானியத் என்னும் பண்பு இவ்வாறு இருக்கும் படி அவனை தூண்டுகிறது. மேலும் மனிதனின் சக்தியாலோ அல்லது வேறு எந்த உயிரினத்தின் ஆற்றலாலோ, ஒருபோதும் அல்லாஹ்வைப்போன்று தாராள மனப்பான்மையுடன் இருக்க முடியாது.

அல்லாஹ் அல் முஹைமின் ஆவான் - பாதுகாப்பவன், தாராள மனப்பான்மையானவன், பொறுப்பாளன், காவலன், சிறந்தவன், உன்னதமானவன் மற்றும் உயர்ந்தவன்.

சிலரின் கூற்றுப்படி அல் முஹைமின் என்றால் சிறந்தவன், உன்னதமானவன் உயர்ந்தவன் அதேபோலவே வேறு சிலரின் கூற்றுப்படி அல் முஹைமின் என்றால் மக்களின் வாழ்வாதாரத்திற்கு பொறுப்பானவன் என்றும் அர்த்தம் வழங்கப்படுகிறது.

அல் முஹைமின் என்ற இந்த பண்பை பின்பற்ற வேண்டுமனால் மிதமிஞ்சிய அதிகமான ஆசைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்களை (உங்கள் ஆசைகளை) வெல்ல முயற்ச்சிக்க வேண்டும். அல்லாஹ்விடமிருந்து எதுவும் மறைந்ததாக இல்லை என்பதை ஆராய்ந்து நீங்கள் உணரவும் வேண்டும்.

இந்தப் பண்புகளை பொருத்தமான முறையில் ஓதுவதன் மூலம், அது உங்கள் உள்ளும் புறமும் தூய்மைபடுத்துவதற்கும், ஒளிரச்செய்வதற்கும் உகந்ததாக அமையும்.

ஆகவே, என் அன்பான சகோதரர்களே, சகோதரிகளே, குழந்தைகளே அல்லாஹ்வின் பண்புகளின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று நான் நம்புகிறேன். அல்லாஹ்வின் அனைத்து பண்புகளையும் தினமும் பாராயணம் செய்வது அவசியமாகும். அவற்றின் பெருளை உணர்ந்தவாறு பாராயணம் செய்வதன் மூலம், அது நம்பிக்கையாளாகளின் அன்றாட வாழ்க்கையில் ஏராளமான அருட்கொண்டகளை அழைத்து வரும். நீங்கள் கவலையாக இருந்தாலும்,

மகிழ்ச்சியாக இருந்தாலும், அல்லது கடன்கள் மற்றும் நிதிபற்றாக்குறை காரணமாக மனச்சோர்வடைந்த நிலையில் இருந்தாலும் அல்லது உங்கள் வீடுகளில் போதுமான வசதிகள் இல்லாமல் இருந்தாலும், அல்லது உங்கள் குடும்பத்தினரை வழி நடத்தி செல்ல போதுமான வாழ்வாதாரமோ ஒரு வேலையோ இல்லாமல் இருந்தாலும் நீங்கள் அல்லாஹ்வின் பண்புகளை பாராயணம் செய்வதிலும் உங்கள் கட்டாய தொழுகையை கடைப்பிடிப்பதிலும் உறுதியாக இருக்க மறந்து வீடாதீர்கள். அவ்வாறேயானால், எந்தவொரு பிரச்சினையும் இல்லாதது போல அது உங்கள் வாழ்க்கையில் அமைதி மற்றும் நம்பிக்கையினை கொண்டுவரும். இதன் அர்த்தம் உங்கள் வாழ்க்கையில் எவ்வித பிரச்சினையும் இருக்காது என்பதல்ல, உண்மையில் வாழ்க்கையில் அனைவருக்கும் பிரச்சினை உள்ளது மேலும் சோதனைகளும் இருக்கும். குறிப்பாக நம்பிக்கையாளர்களுக்கு பல சோதனைகளும் இருக்கும். ஏனெனில் இந்த சோதனைளும் பிரச்சனைகளும் அவனுடைய நம்பிக்கையாளாகள் மீது பெரிதாக இருப்பதை அல்லாஹ் உறுதி செய்வான். ஆனால் அவை நம்பிக்கையாளர்களை பாதிப்பதில்லை.

வியாழக் கிழமை (02 ஜுலை 2020) அன்று அல் அஸீம் தப்ஸீர் குர் ஆனின் பற்றிய கொஞ்சம் வேலை செய்தபின், சுமார் இரவு 10.20 மணியளவில் அல்லாஹ்வின் பண்புகளைக் குறித்து நான் வாசித்து கொண்டிருந்தேன். அப்போது **“யா அஹது” “யா சமது” “யா வித்ரு” “யா பர்து”** ஆகிய அல்லாஹ்வின் இந்த பண்பு பெயர்கள் என் நாவில் வந்தன.

வேறு வார்த்தைகளில் கூறுவேமேயானால், அல்லாஹ் எனக்கு இவ்வாறு புரிய வைத்தான்.

**யா அஹது - இறைவா நீ ஒருவனானவன்.**

**யா சமது - இறைவா நீ நிகரற்றவன் (தேவையற்றவன்)**

**யா வித்ரு - இறைவா நீ ஏகனானகியவன்.**

**யா பர்து - இறைவா நீ தனித்துவமானவன்.**

அல்லாஹ்வின் இந்த பண்பு பெயர்கள் நோய்வாய்பட்டவர்களுக்கு அல்லது நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் உங்களுக்காக நீங்கள் ஓதிக்க கொள்ளலாம். அல்லாஹ் எனக்கு தெளிவுபடுத்தியிருப்பது சலாத் உல் ஷி.ஃ.பாவைப்பற்றியது, இது நோய்களிலிருந்து குணமடைவதற்கான மேலதிக பிரார்த்தனையாகும் நோய்களிலிருந்து மீட்சியை பெற இவ்வாறு துவா செய்ய வேண்டும்.

அல்லாஹும்மா யா ஷா.ஃ.பியல் அம்ராத்.!

அல்லாஹ்வே எல்லா நோய்கயிலிருந்தும் மீட்சியை அளிப்பவனே

பிஸ்மில்லாஹில் கா.ஃ.பி!

அல்லாஹ்வின் பெயரால் நீ போதுமானவன்

பிஸ்மில்லாஹில் ஷா.ஃ.பீ!

அல்லாஹ்வின் பெயரால் நீ குணமளிப்பவன்

பிஸ்மில்லாஹி இஷ்ப்னீ!

அல்லாஹ்வின் பெயரால் நீ என்னை குணப்படுத்துவாயாக.

இவை அனைத்தையும் எனக்கு அவன் கற்பித்ததற்காக நான் அல்லாஹ்வுக்கு மிக்க நன்றி சொல்ல வேண்டும். எனவே சலாத்துல் ஷி.ஃ.பாவைப் பொறுத்தவரை இது நோயிலிருந்து பாதுகாப்பை பெறுவதற்கான ஒரு பிரார்தனையாகும். எனவே சூரா யாசின் ஒரு முறை ஓதிவிட்டு, இரண்டுரக்காத் நபல் தொழுகையை நிய்யத்துடன் செய்ய வேண்டும். தொழுகையில் எந்த சூராவை வேண்டுமானலும் நீங்கள் ஓதலாம். மேலும் தொழுகையின் முடிவிற்கு முன்பு யா அஹது, யா சமது, யா வித்ரு, யா .ஃ.பர்து ஆகிய இறைபண்புகளை முடிந்தவரை ஓதவேண்டும்.

உங்கள் நோயின் மீட்ச்சிகாக இந்த இபாதத்தை நீங்கள் செய்கிறீர்கள் என்றால், இந்த இறை பண்புகளையும் உரக்கப்படித்து பின்னர் ஊதி உங்கள் உடலில் தடவலாம். மற்றொருவருக்காக நீங்கள் இதைச் செய்கிறீர்கள் என்றால்

ஷிபாவின் துஆக்களை மற்றும் அல்லாஹ்வின் பண்புகளை ஓதிவிட்டு, அவர் மீது ஊதுங்கள்.

எனவே அல்லாஹ்வின் பண்புகளை மெதுவாகவும் பக்தியுடனும், அவற்றின் பொருளை உணர்ந்தவாறு செய்யும் படி எனது தோழர்களையும் எனது முஸ்லீம் சகோதர்கள், சகோதரிகள் மற்றும் குழந்தைகளையும் மேலும் அனைத்து மனித குலத்தையும் நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் எல்லா கஷ்டங்களிலிருந்தும் அல்லாஹ் உங்களை விடுவித்து, அவனுடைய அன்பையும் கருணையையும் உங்கள் மீது பொழியும் படி நான் பிரார்த்திக்கிறேன். அவன் உங்களுக்கு வழங்கும் அனைத்தும் உங்களின் இவ்வுலக வாழ்கையிலும் மறுவுலக வாழ்கையிலும் உங்களுக்கு போது மானதாக அமையட்டும் இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**

**Azim Ahmad**

EDITING & PUBLISHING ARE DONE BY

*AMIR*

*JAMAAT - UL-SAHIH-AL-ISLAM*

TAMIL NADU

**Ph No: 917502272774**